# முதல் கட்ட விரிவாக்கத் திட்டத்துக்கான மெட்ரோ ரயில் ஒப்படைப்பு

சென்னை, அக்.19: மெட்ரோ ரயில் விரிவாக்கத் திட்டத்துக்காக ஸ்ரீசிட்டியில் அல்ஸ்டம் தொழிற்சாலையில்தயாரிக்கப்பட்ட முதல் ரயில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்திடம் சனிக்கிழமை ஒப்படைக்கப்பட்டது. மீதமுள்ள 9 ரயில்கள், அடுத்த ஆண்டு பிப்ரவரி இறுதிக்குள் வழங்கப்படும் என்று மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சென்னை வண்ணாரப்பேட்டை முதல் விமான நிலையம் வரை முதல் வழித்தடத்திலும், சென்ட்ரல் முதல் பரங்கிமலை வரை இரண்டாவது வழித்தடத்திலும் மொத்தம் 45 கி.மீ. தூரத்துக்கு மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த இரு வழித்தடங்களில் ஓடும் மெட்ரோ ரயில்களில் தினசரி சராசரியாக 95 ஆயிரம் பேர் பயணம் செய்கின்றனர்.

இதற்கிடையில், முதல் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் வண்ணாரப்பேட்டை- விம்கோ நகர் வரை 9.051 கி.மீ. தொலைவுக்கு விரிவாக்கத் திட்டத்துக்கான கட்டுமானப் பணி 2016-ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்டது. இந்த பணிகள் 2020-ஆம் ஆண்டு ஜூனில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பணிகள் முடிந்து, மெட்ரோ ரயில் சேவை தொடங்கவுள்ளது.




ஆந்திர மாநிலம் ஸ்ரீ சிட்டியிலிருந்து கொடியசைத்து முதல் ரயிலை சென்னைக்கு அனுப்பி வைக்கும் சென்னை மெட்ரோ ரயில் நிறுவன நிர்வாக இயக்குநர் பங்கஜ்குமார் பன்சால், அல்ஸ்டம் நிறுவன நிர்வாக இயக்குநர் ஒடின் புருனோ. உடன் மெட்ரோ ரயில் நிறுவன இயக்குநர்(இயக்கம்) நரசிம்ம பிரசாத்.

இங்கு ரயில்களை இயக்குவதற்காக,ரயில்களை தயாரித்து வழங்க பிரான்ஸ் நிறுவனமானஅல்ஸ்டம் நிறுவனத்துடன் 2018-ஆம் ஆண்டு மார்ச்சில் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தப்படி, 10 ரயில்களை தயாரித்து வழங்க முடிவு செய்யப்பட்டது.

ரயில்களை தயாரிக்க ஜப்பான் நிறுவனத்தின் கடன் உதவியுடன் ரூ.200 கோடி முதலீடு செய்யப்படுகிறது. அல்ஸ்டம் நிறுவனம் ஆந்திர மாநிலம் ஸ்ரீ சிட்டியில் உள்ள தனது தொழிற்சாலையில் மெட்ரோ ரயிலுக்கான பெட்டிகளை நிகழாண்டில் பிப்ரவரியில் தயாரிக்கத் தொடங்கியது.

இதைத் தொடர்ந்து, ஒரு ரயிலுக்குத் தேவையான பெட்டிகள் தயாரிக்கப்பட்டு, பல்வேறு சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டன. சோதனை முடிந்து மெட்ரோ ரயில் தயாராக இருந்தது.

இந்நிலையில், முதல்கட்ட விரிவாக்கத் திட்டத்துக்காக தயாரிக்கப்பட்ட முதல் ரயில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. ஸ்ரீசிட்டியில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்த ரயிலை மெட்ரோ ரயில் நிறுவன நிர்வாக இயக்குநர் பங்கஜ்குமார் பன்சால் கொடியசைத்து அனுப்பி வைத்தார். நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவன இயக்குநர் (இயக்கம்) நரசிம்ம பிரசாத் உள்பட பலர் பங்கேற்றனர்.

இது குறித்து மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரி ஒருவர் கூறியது:

மெட்ரோ ரயில் முதல் வழித்தடத்தில் விரிவாக்கத் திட்டத்துக்காக 10 ரயில்களை கொள்முதல் செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்டது.

விமானநிலையம் முதல் வண்ணாரப்பேட்டை வரை முதல் வழித்தடத்திடத்தில் விரிவாக்கத் திட்டத்தில் (வண்ணாரப்பேட்டை-விம்கோ நகர் வரையிலான வழித்தடத்தில்) இந்த ரயில்களை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. முதல் ரயிலை தயாரித்து எங்களிடம் ஒப்படைத்து உள்ளனர்.

ஒவ்வொரு பெட்டியாக சென்னை கோயம்பேடு மெட்ரோ பணிமனைக்கு வந்தடையும். அதன்பிறகு, இங்கு வழக்கமான பல்வேறு சோதனைகள் நடைபெறும். பயணிகள் சேவைக்கு அனுப்புவதற்கு முன்னதாக அனைத்துச் சோதனைகளும் முடிந்து தயாராகிவிடும்.

மீதமுள்ள 9 ரயில்கள் தயாரிக்கும் பணி பல்வேறு நிலைகளில் உள்ளன. இந்த ரயில்களைத் தயாரித்து அடுத்த ஆண்டு பிப்ரவரி இறுதியில் அனுப்பி வைப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம் என்றார் அவர்.